இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 247 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 05 – சனிக்கிழமை 18 ஏப்ரல் 2026 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 247 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 05 - Saturday 18 April 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## முட்டைக்குப் பெயர்போன நாமக்கல்லில் - எதிரிகளுக்கு தேர்தலில்

# ‘பெரிய முட்டை’ வழங்கத் திரண்ட மக்கள்!



## டெல்லியின் ரிமோட் கன்ட்ரோலுக்கு அடிமைகள்தான் அடிபணிவார்கள்!

# தன்மானமுள்ள தமிழர்கள் அடிபணிய மாட்டோம்!



## நாமக்கல் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**நாமக்கல், ஏப்.18-**

**தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான கருப்புக் கொடிப் போராட்டம் வெறும் டிரெயிலர்தான்! முழுமையான மெயின் பிக்சரை பார்க்க டெல்லி ஆசைப்படக் கூடாது. டெல்லியின் ரிமோட் கண்ட்ரோலுக்கு அடிமைகள்தான் அடிபணிவார்கள்… தன்மானமுள்ள தமிழர்கள் அடிபணிய மாட்டோம் என நாமக்கல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் உறுதிபடக் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.04.2026) நாமக்கல்லில் நடைபெற்ற சட்டமன்றத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

**“தமிழன் என்றோர் இனமுண்டு,**
**தனியே அவற்கொரு குணமுண்டு!”**

கருப்புக் கொடியேற்றி இன்றைக்கு காட்டிவிட்டோமா… இது வெறும் டிரெயிலர்தான்! மெயின் பிக்சரை பார்க்க வேண்டும் என்று டெல்லி ஆசைப்படக் கூடாது!

“தமிழர்களின் ரத்தத்தில் சூடு குறைந்துவிட்டது, தெருவில் இறங்கிப் போராட மாட்டார்கள் என்று நினைக்காதீர்கள்… மொழிக்காக வீதிகளில் இறங்கியவர்கள்… எங்கள் இனத்தின் உரிமைக்காக இறங்கமாட்டோமா? தமிழர்களுக்காகப் போராட யார் இருக்கிறார்கள் என்று நினைத்தார்கள். இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறான்! ஆயிரம் எமர்ஜென்சியைப் பார்க்க நான் தயார்!

**ஒன்றிய பா.ஜ.க.வின்**
**கொட்டத்தை அடக்குவோம்!**

பிரதமர் மோடி அவர்களே… டெல்லியின் ரிமோட் கண்ட்ரோலுக்கு அடிமைகள்தான் அடிபணிவார்கள்… தன்மானமுள்ள தமிழர்கள் அடிபணிய மாட்டோம்! தென்மாநில மக்களுடைய குரலை மதிக்கமாட்டேன் என்று இருக்கும் ஒன்றிய பா.ஜ.க.வின் கொட்டத்தை அடக்குவோம்!

மாநிலங்களால் உருவாகியிருக்கும் இந்தியாவில் - மாநிலங்களை நசுக்க வேண்டும் என்று நினைத்தால் - கை கட்டி, வாய் பொத்தி, அடிமையாக அடங்கியிருப்போம் என்று தப்புக் கணக்கு போட்டிருக்கிறீர்கள்…

தமிழ்நாட்டின் போராட்டக் குணத்தைப் பார்க்க ஆசைப்பட வேண்டாம் என்று டெல்லியை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க.வும்,**
**அ.தி.மு.க.வும் ஏற்படுத்தும் ஆபத்து!**

தொகுதி மறுசீரமைப்பு என்பது, தமிழ்நாட்டிற்கு எதிராகப் பா.ஜ.க.வும் - அதற்கு ஜால்ரா போடும் அ.தி.மு.க.வும் ஏற்படுத்தியிருக்கும் பேராபத்து!”

தமிழ்நாட்டின் குரலை ஒடுக்க பா.ஜ.க. போடும் சதி திட்டம்தான், தொகுதி மறுசீரமைப்பு. அதனை வெளிப்படையாக எதிர்ப்பதற்குக்கூட முதுகெலும்பற்ற கூட்டம்தான் அ.தி.மு.க.

தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கும் நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.பி.க்கள் அனைவரும் பிரச்சாரத்தில் இருப்பார்கள்; இந்த இடைவெளியில் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றலாம் என்று பா.ஜ.க. நினைத்தது!

**மக்களின் உரிமைகள்**
**பாதுகாக்கப்பட வேண்டும்!**

முதலில், மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்! அப்போதுதான் ஜனநாயகத்தில் தேர்தலுக்கு ஒரு அர்த்தம் இருக்கும். நாம் போடும் வாக்குக்கே வேல்யூ இல்லை என்று ஒரு நிலை வரும் என்றால், அதை எதிர்க்க வேண்டாமா? அதனால்தான், நம்முடைய எம்.பி.க்கள் அனைவரும் டெல்லியில் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்!

நமக்கு கொள்கைதான் முக்கியம்! தமிழ்நாட்டு உரிமைகள்தான் முக்கியம்! நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா சொன்னதுதான், எங்களுக்கு பதவி என்பது தோளில் போடும் துண்டு, கொள்கை என்பது இடுப்பில் கட்டியிருக்கும் வேட்டி!

பேரறிஞர் அண்ணாவும் - தலைவர் கலைஞரும் தந்த தன்மான உணர்வோடு, தமிழ்நாட்டைப் பாதுகாக்க உங்களுடைய ஆதரவைக் கேட்டு நான் வந்திருக்கிறேன். தலைவர் கலைஞர் உருவாக்கிய நாமக்கல் மாவட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன். தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையை உருவாக்கிய தலைவர் கலைஞரின் மகனாக நான் உங்களிடத்தில் வந்திருக்கிறேன்.

**நமது வெற்றி வேட்பாளர்களை**
**அறிமுகம் செய்கிறேன்!**

உங்கள் அனுமதியோடு வேட்பாளர்களை அறிமுகப்படுத்துகிறேன்.

முதலில், ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மதிவேந்தன் அவர்கள்! மருத்துவம் படித்து, மாண்புமிகு அமைச்சராக உயர்ந்து, அவர் கவனித்த துறைகளை வளர்த்தெடுத்தவர்.

அடுத்து, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஈஸ்வரன் அவர்கள்! நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வலுசேர்க்கும் தலைவர்களில் ஒருவராக விளங்கிக் கொண்டிருப்பவர். கடந்த முறை உங்களுடைய குரலாக சட்டமன்றத்தில் ஒலித்து, இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கான திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்.

அடுத்து, நாமக்கல் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கே.பி.ராணி அவர்கள். ராணி என்று தெரிவதைவிட, நாமக்கல் ராணி என்று சொன்னால் அனைவருக்கும் தெரியும். அந்தளவுக்கு இந்த ஊரையே தன்னுடைய அடையாளமாக மாற்றியிருக்கும் கழக வீராங்கனை. நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் - ஒன்றிய குழுத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்!



**பா.ஜ.க. எனும் பருந்தை**

**விரட்டியடிக்க வேண்டும்!**

**தமிழ்நாட்டை வட்டமிடும் பா.ஜ.க. எனும் பருந்தை விரட்டியடிக்க வேண்டும்! டபுள் எஞ்சின், டப்பா எஞ்சின் என்று சொல்லிக் கொண்டு டெல்லியினுடைய ரிமோட் கண்ட்ரோலுக்கு ஆடும் அடிமைகள் தமிழ்நாட்டை ஆளக் கூடாது! தமிழ்நாட்டை நாசப்படுத்த நினைக்கும் ஆணவப் பா.ஜ.க.வும் – அடிமை அ.தி.மு.க.வும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தப்பட வேண்டும்! அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம்தான் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும்!**

அடுத்து, சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் பூமலர் அவர்கள்! சேந்தமங்கலம் தொகுதியில் இரண்டு முறை எம்.எல்.ஏ. வாக இருந்த மரியாதைக்குரிய நினைவில் வாழும் பொன்னுசாமி அவர்களின் அன்பு மகள். பொன்னுசாமி அவர்கள் காலத்தில்தான், கொல்லிமலை வளர்ச்சி அடைந்தது! கொல்லிமலை மிளகுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் கிடைத்தது.

அடுத்து, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் எஸ். பாலு அவர்கள்!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்